பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

27 03 2024 WEDNESDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மக்களவைக்கு முதல்கட்டமாக அடுத்த மாதம் 19-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 102 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.
- மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக ஜம்மு காஷ்மீர் வளர்ச்சிப்பாதைக்கு திரும்பியுள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.
- வேலைவாய்ப்பின்மை பிரச்சினைக்கு தீர்வுகாண பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தவறிவிட்டதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.
- தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் கைது தொடர்பாக அமெரிக்கா தெரிவித்துள்ள கருத்துக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.
- ஆசிய கோப்பைக்கான மூவர் கூடைப்பந்து போட்டியின் லீக் ஆட்டங்களில் இந்தியா இன்று மாலத்தீவு மற்றும் Macau அணிகளை வென்றது.

----- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ----

<<<<<<<<>>>>>>>

மக்களவைக்கு முதல்கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள 102 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

17 மாநிலங்கள் மற்றும் நான்கு யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட இந்த தொகுதிகளில் வாக்குப்பதிவு அடுத்த மாதம் 19-ஆம் தேதி நடைபெறுகிறது.

பீகாரில் மட்டும் வேட்புமனுக்களை தாக்கல் செய்ய நாளை கடைசி நாளாகும்.

இதர மாநிலங்களில் வேட்புமனுக்கள் பரிசீலனை நாளை நடைபெறும்.

மனுக்களை விலக்கிக்கொள்ள 30-ஆம் தேதி கடைசி நாளாகும்.

பீகாரில் மட்டும் மனுக்கள் மீதான பரிசீலனை வரும் 30-ஆம் தேதி நடைபெறும்.

அம்மாநிலத்தில் மனுக்களை விலக்கிக்கொள்ள அடுத்த மாதம் 2-ஆம் தேதி கடைசி நாளாகும்.

தமிழகத்தின் 39 தொகுதிகளிலும், ராஜஸ்தானின் 12 தொகுதிகளிலும், உத்தரப்பிரதேசத்தின் எட்டு தொகுதிகளிலும், மத்தியப்பிரதேசத்தின் ஆறு தொகுதிகளிலும், உத்தராகண்ட், அஸ்ஸாம் மற்றும் மகாராஷ்ட்ராவில் தலா ஐந்து தொகுதிகளிலும், பீகாரில் 4 தொகுதிகளிலும், மேற்குவங்கத்தில் இரண்டு தொகுதிகளிலும், அருணாச்சலப்பிரதேசம், மணிப்பூர், மேகாலயா ஆகிய மாநிலங்களில் தலா இரண்டு தொகுதிகளிலும், சத்தீஸ்கர், மிசோரம், நாலாந்து, திரிபுரா, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள், ஜம்மு காஷ்மீர், லட்சத்தீவு மற்றும் புதுச்சேரியிலும் முதல் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதற்கிடையே, தமிழகத்தில் தேர்தல் பணிகள் தொடர்பாக இதுவரை ஐந்து லட்சம் பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹூ கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

*<u>(சவுண்ட் பைட் - சாஹூ - 47 செகண்ட்ஸ்)</u>*

இதனைத்தொடர்ந்து, டிடி தமிழ் தொலைக்காட்சி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பத்திரிகை தகவல் அலுவலகம் தயாரித்துள்ள தேர்தல் தொடர்பான கையேட்டினையும் திரு சத்யபிரத சாஹூ வெளியிட்டார்.

மாநிலம் முழுவதும் பணபலம் பயன்படுத்தப்படுவதை கட்டுப்படுத்துவதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதுவரை உரிய ஆவணங்கள் இன்றி கொண்டுசெல்லப்பட்ட 69 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

100 சதவீத வாக்குப்பதிவின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த தேர்தலில் முதல் முறையாக வாக்களிக்க உள்ளதை ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாக சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த மாணவிகள் தெரிவித்தனர்.

*<u>(சவுண்ட் பைட் - மாணவிகள் - 27 செகண்ட்ஸ்)</u>*

<<<<<<<<>>>>>>>

பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு திலிப் கோஷ் மற்றும் காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்ரியா Shrinate ஆகியோருக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜிக்கு எதிராக சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்ததற்காக திரு திலிப் கோஷுக்கும், பிஜேபி வேட்பாளர் கங்கனா ரனாவத்துக்கு எதிராக சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்ததற்காக சுப்ரியா Shrinate-க்கும் விளக்கம் கோரி இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

முதல்நோக்கில் இந்த கருத்துக்கள் தேர்தல் நடத்தை நெறிமுறைகளை மீறியதாக அந்த நோட்டீஸுல் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>>

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக ஜம்மு காஷ்மீர் வளர்ச்சியை கண்டு வருவதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு அனுராக் தாக்கூர் கூறியுள்ளார்.

ஜம்முவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜம்மு காஷ்மீருக்கு அளிக்கப்பட்ட சிறப்பு சட்டப்பிரிவை மத்திய அரசு ரத்து செய்ததன் மூலம், வளர்ச்சிக்கான பாதை திறக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

ஜம்மு காஷ்மீரின் அனைத்துத்துறைகளும் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சியை கண்டுவருவதாக அவர் தெரிவித்தார்.

சட்டம் - ஒழுங்கு நிலைமையும் மேம்பட்டுள்ளதாகவும் திரு அனுராக் தாக்கூர் கூறினார்.

<<<<<<<<>>>>>>>

வேலைவாய்ப்பின்மை பிரச்சினைக்கு தீர்வுகாண பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தவறிவிட்டதாக காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ஊரகப்பகுதிகளில் 17 புள்ளி ஐந்து சதவீத இளையோர் மட்டுமே முறையான வேலைவாய்ப்பை பெற்றிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, சர்வதேச தொழிலாளர் அமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையையும் அதில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் வேலைவாய்ப்பின்மை மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாகவும் திரு மல்லிகார்ஜுன கார்கே குறை கூறியுள்ளார்.

<<<<<<<<>>>>>>>

தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ள கருத்துக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

பிற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக்கூடாது என்பதை புரிந்துகொண்டு இதுபோன்ற கருத்துக்கள் தெரிவிப்பதை தவிர்க்க வேண்டும் என்று இந்திய வெளியுறவுத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

நம் நாட்டின் நீதித்துறை தன்னிச்சை அமைப்பாக செயல்படுகிறது என்றும், இதனை அறிந்துகொள்ளாமல் கருத்துக்களை தெரிவிப்பது தேவையற்றது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இப்பிரச்சினை தொடர்பாக, தில்லியில் உள்ள இந்தியாவிற்கான அமெரிக்க தூதரக அதிகாரி நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் இந்தியா சம்மன் அனுப்பியுள்ளது.

<<<<<<<<>>>>>>>

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களில் 33 பேரை விடுவித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, கடந்த 15 மற்றும் 17-ஆம் தேதிகளில் கைது செய்யப்பட்ட நாகை மற்றும் ராமேஸ்வரத்தை சேர்ந்த 36 மீனவர்கள் தொடர்பான வழக்கு இலங்கை ஊர்காவல் நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் ராமேஸ்வரத்தை சேர்ந்த மீனவர் ஒருவர் இரண்டாவது முறையாக இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளதால் அவருக்கு ஓராண்டு சிறையும், இரண்டு விசைப்படகு ஓட்டுநர்களுக்கு ஆறு மாத சிறை தண்டனையையும் விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

விடுதலை செய்யப்பட்ட 33 மீனவர்களும் ஓரிரு நாட்களில் தமிழகம் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<<<<<>>>>>>>

பாதுகாப்பு தளவாடங்கள் கொள்முதலில் உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளதாக ராணுவ தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே கூறியுள்ளார்.

புதுதில்லியில் தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தின் உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

பாதுகாப்பு தளவாடங்கள் இறக்குமதி முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு ராணுவம் தயாராக உள்ளதாகவும் ஜெனரல் மனோஜ் பாண்டே தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>

பஞ்சாப் மற்றும் சண்டிகரில் அமலாக்கத்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனர்.

மூத்த ஐ ஏ எஸ் அதிகாரி இல்லத்திலும் இந்த சோதனை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

137 கோடி ரூபாய் மதிப்பிலான கொய்யா மரங்களுக்கான இழப்பீடு முறைகேடு தொடர்பான வழக்கில் இந்த சோதனை நடத்தப்பட்டது.

<<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கோப்பைக்கான மூவர் கூடைப்பந்து போட்டி சிங்கப்பூரில் இன்று தொடங்கியது.

இன்று நடைபெற்ற லீக் ஆட்டங்களில் இந்தியா, மாலத்தீவு மற்றும் Macau அணிகளை இந்தியா வென்றது.

--------------

தாய்லாந்து சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Ayush Shetty காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், அவர் 21-19, 17-21, 21-14 என்ற செட் கணக்கில், மலேசியாவின் Justin Hos –ஐ வென்றார்.

இதர ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் பாரத் ராகவ் சத்தீஸ்குமார் மற்றும் அபிஷேக் வெற்றிபெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Dingku Singh Konthoujam - Amaan Mohammad இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-14, 6-21, 21-18 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் Teges Satriaji Cahyo Hutomo – Nikaolaus Joaquin இணையை வென்றது.

------------

பேட்மிண்டன் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது

-----------

ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டி ஜூலை 19-ஆம் தேதி தொடங்கி, 28-ஆம் தேதி வரை இலங்கையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், ஐக்கிய அரபு எமிரேட், இலங்கை, பங்களாதேஷ், மலேசியா மற்றும் தாய்லாந்து இதில் பங்கேற்கின்றன.

-------------------

உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டி தென்கொரியாவின் Incheon –ல் இன்று தொடங்குகிறது.

---------------------

டேபிள் டென்னிஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் ஆடவர் பிரிவில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் 60-வது இடத்திற்கும், மகளிர் பிரிவில் ஸ்ரீஜா அகுலா 40-ஆவது இடத்திற்கும் முன்னேறியுள்ளனர்.

------------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி இன்று ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

ஹைதராபாதில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற மும்பை அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

<<<<<<<<END>>>>>>>